## சுருக்கம்

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம்–தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வித் துறை– திரு.பா.இளங்கோ என்பவர் 20.02.2014 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (தொ.க.3(1)துறை

அரசாணை (2ப) எண். 219 நாள் 05.08.2016

திருவள்ளுவர் ஆண்டு–2047

ஆடி–21

படிக்கப்பட்டவை:–

1) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 42794/ஜே1/2014, நாள்.04.04.2015.
2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.2183/சிடி–சி2/2016, நாள் . 28.03.2016.

******

**ஆணை:–**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.பா.இளங்கோ என்பவர் இளநிலை உதவியாளராக 20.02.2014 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.கோ.பாண்டுரங்கன் என்பவர் 08.03.1998 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.பா.இளங்கோ என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 29.05.1976 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, இளநிலை உதவியாளராகப் பணி அமர்த்தப்பட்ட திரு.பா.இளங்கோ என்பவரைத் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 20.02.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட 1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை16(பி)ன் பிற்பகுதியின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இதற்கு இசைவளித்துள்ளது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், பக்கிரிபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது காலமான திரு.கோ.பாண்டுரங்கன் என்பவரின் மகன் திரு.பா.இளங்கோ என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 20.02.2014 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை வரன்முறைப்படுத்திட அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியரின் பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவைகளை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.9731/ட்டி1/2016–1, நாள்.28.06.2016–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
<u>நகல்</u>
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
தொழிலாளர் (ம)வேலை வாய்ப்புத்துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்